


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ நவம்பர். 05, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 31 ❖ ரூ.10

## தென் மாவட்டங்களில் 24 மணி நேரத்தில்

# கனமழை!

## வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை சென்னையில் மிதமான மழை: மக்கள் மகிழ்ச்சி

சென்னை, நவ.5-

அடுத்த 24 மணி நேரத்தில் சில தென் மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும், சென்னையில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் சென்னை மாநகர மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று (நவ.4) வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: தென் தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் சில தென் மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொறுத்தவரை அடுத்த 24 மணி நேரத்தில் மிதமான மழை பெய்ய வாய்ப்புண்டு.

இன்று (நவ.5) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை (நவ. 6) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

இவ்வாறு சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு**



▶ சென்னை தலைமைச் செயலகத்தில் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில் மனிதவள சீர்திருத்தக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் நிதித்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் முருகானந்தம், மனிதவள மேலாண்மை துறை அரசு செயலாளர் மைதிலி ராஜேந்திரன், நிதித்துறை துணை செயலாளர் லட்சுமி பவ்யா தண்ணீரு, குழுவின் தலைவர் பாருக்கி மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு இடுபொருள் வழங்கல் வேளாண்மை உழவர் நலத்துறை ஏற்பாடு

திருவரங்குளம்,நவ.5-

புதுக்கோட்டை மாவட்டம்திருவரங்குளம் வட்டாரத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் மேற்கொள்ளப்படும் திட்டமான தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படும் ஒருங்கிணைந்த பண்ணையத்தின் இடுபொருட்கள்வழங்கும் நிகழ்வு மற்றும் திட்ட செயலாக்கம் பற்றிய விவசாயிகளுக்கான கூட்டம் வேளாண்மை இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது.



புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பெரியசாமி தலைமை தாங்கி விவசாயிகளுக்கு நெல் சாகுபடிக்கான இடுபொருட்கள், நெல் விதைகள், நெல் நுண்ணூட்டம், உயிர் உரங்கள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வழங்கிய அதிகாரிகள் நலத்திட்டங்களை எடுத்துக்கூறிவிவசாயிகள் அதை முழுமையாக பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

கூட்டத்தில் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் மத்திய திட்டம் கலந்துகொண்டு, இந்த திட்டத்தின் செயல்பாடுகள் நன்மைகள் சாத்திய கூறுகள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்து கூறினார், திருவரங்குளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வெற்றிவேல் நன்றி கூறினார். ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு நெல் சாகுபடிக்கான இடுபொருட்களை பெற்றுச் சென்றனர்.

## சென்னையில் 48 மணிநேரத்தில் 90% மழை பாதிப்புகள் முழுமையாக அகற்றம்: அமைச்சர் சுப்பிரமணியன் தகவல்

சென்னை, நவ,5-

"சென்னையில்கடந்த 48 மணிநேரத்தில் 15 முதல் 35 செ.மீ., வரையிலான மழை பொழிந்தாலும் பெரிய அளவிலான பாதிப்புகள் இல்லை. மேலும் 90% பாதிப்புகள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளது," என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சோழிங்கநல்லூர் தொகுதி, செம்மஞ்சேரி சுனாமி குடியிருப்பு பகுதி, டிஎல்எப், செம்மொழி பூங்கா சாலை, துரைப்பாக்கம் சதுப்புநிலப்பகுதி, மடிப்பாக்கம், புழுதிவாக்கம், வேளச்சேரி ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மற்றும் தூர்வாரும் பணிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

இதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது ஏற்பட்ட பாதிப்புகளை முதல்வர் தொடர்ச்சியாக நேரடியாக களஆய்வு மேற்கொண்டார். பாதிப்பிற்குள்ளான பகுதிகளில், வெள்ளத்தடுப்பு பணிகளை செய்ய குழு ஒன்று அமைக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டது. அதனடிப்படையில் சென்னை மாநகராட்சி ரூ.1,327.44 கோடி, நகராட்சி நிர்வாக இயக்குநரகம் ரூ.82.15 கோடி, நீர்வளத்துறை ரூ.434.22 கோடி, நெடுஞ்சாலைதுறை ரூ.229.76 கோடி, கொசஸ்தலையாறு கரையோர பகுதிகளில் ரூ.3,220 கோடி, கோவளம் கரையோர பகுதிகளில் ரூ.1,714 கோடி, உலகவங்கியிடம் இருந்து ரூ.120 கோடி என்று ஆக மொத்தம் ரூ.7,127.57 கோடி செலவில் வெள்ளத்தடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.



இந்தப்பணிகள் கடந்த 15 மாதங்களுக்கு முன்னர் திட்டமிடப்பட்டாலும், கடந்த7மாதங்களாகதான் நடைபெற்று வருகிறது. கொசஸ்தலையாறு, கோவளம் கரையோர வெள்ளத்தடுப்பு பணிகள் மூன்று ஆண்டுகளுக்கு திட்டமிடப்பட்ட பணியாகும். மாநகராட்சி எல்லைக்குள் 2 ஆண்டுகளில் இந்தப்பணிகள் முடிக்க டெண்டர் விடப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டது. சென்னை மாநகராட்சியும், நகராட்சி நிர்வாக துறையும், தமிழக நீர்வளத்துறையும், நெடுஞ்சாலைத்துறையும் ஒருங்கிணைந்து இதுவரை ரூ.2,073.57 லட்சம் செலவில் பணிகள் நடந்து முடிவடைந்துள்ளது.

சென்னை மாநகராட்சியில் 220 கி.மீ., நீளத்திற்கான மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டு இதுவரை 157 கி.மீ., தூரத்திற்கு பணிகள் முடிவடைந்துள்ளது. நகராட்சி நிர்வாகத்துறையும், நீர்வள ஆதாரத்துறையும், நெடுஞ்சாலைத்துறையும் பல்வேறு பணிகள் மேற்கொண்டதன் விளைவாக சென்னையில் கடந்த 48 மணிநேரத்தில் 15 முதல் 35 செ.மீ., வரையிலான மழைபொழிந்தாலும் பெரிய அளவிலான பாதிப்புகள் இல்லை. மேலும் 90% பாதிப்புகள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளது.

சென்னை மாநகர எல்லைக்குள் சீத்தம்மாள் காலனி, தியாகராயா சாலை, பனகல் சாலை, விருகம்பாக்கம் பகுதியில் இராமசாமிசாலை, பி.டி இராஜன்சாலை, இராஜமன்னார்சாலை, டபுள்டேங்க்ரோடு, சைதாப்பேட்டை பகுதியில் திருவள்ளுவர் சாலை, சுப்பிரமணியம் சாலை மற்றும் வேளச்சேரியில் டான்சிநகர், இந்திராநகர் போன்ற பல்வேறு இடங்களிலும் மழைநீர் வடிகால் அமைக்கும்பணி முடிவடைந்துள்ளதால் மழைநீர் தேங்காதநிலை உருவாக்கப்பட்டுள்ளது.

சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதி என்பது ஏறத்தாழ 7 லட்சம் வாக்காளர்களை கொண்ட மிகப்பெரிய தொகுதி ஆகும். இந்த பகுதியில் ஆயிரக்கணக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டு குடிசைப்பகுதியில் வாழும்ஏழை,எளியமக்கள் குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். இந்த தொகுதியில் மழைபாதிப்புகளை முதல்வர் 5 முறைக்கு மேல் நேரில் வந்து ஆய்வு மேற்கொண்டார்.

செங்கல்பட்டு அருகில் இருக்கின்ற 40க்கும் மேற்பட்ட சிறிய ஏரிகள், குளங்களில் பெருக்கெடுத்து ஓடுகின்ற உபரிநீர் ஒட்டுமொத்தமாக செம்மஞ்சேரி பகுதிக்குள் நுழைந்து 5 கி.மீ., தூரமும் குடியிருப்புகளை பாதித்தபிறகு ஒக்கியம் மதகு வழியாக பக்கிங்கம் கால்வாய் வழியாக கடலுக்குள் செல்கிறது. இந்த குடியிருப்புகளில் வாரக்கணக்கில் மக்கள் மழைநீரினால்தொடர்ந்து பாதிப்படைந்து வந்துள்ளனர்.


கடந்த ஆண்டு 10 செ.மீ., மழைப்பொழிவிற்கு இங்கு 166 மோட்டார் வாகனங்கள்பயன்படுத்தப் பட்டுள்ளது. ஆனால், தற்போது மோட்டார் பயன்பாடு இல்லாமல் இயற்கையாகநீர்வடிகின்ற வகையில் கால்வாய்கள் சீரமைக்கப்பட்டுள்ளது. கலைஞர்சாலை, மேடவாக்கம் பகுதிகளில் நேரிடையாக ஆய்வு செய்யப்பட்டது. இதைத்தொடர்ந்து பள்ளிக்கரணை, மடிப்பாக்கம், புழுதிவாக்கம், வேளச்சேரி போன்ற பகுதிகளிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு செய்த அனைத்து இடத்திலும் மழைநீர்தேக்கம் என்பது இல்லாமல் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள்.

மழைநீர்வடிகால்கள் அமைக்கும் பணிக்கான திட்டமதிப்பீடுகளை தயார்செய்து, நீர்வள ஆதாரத்துறை சார்பில் ஏறத்தாழ 3.5 கி.மீ., நீளத்திற்கும் 12 மீட்டர் அகலத்திற்கும் மிகப்பெரிய கான்கிரீட் கால்வாய்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த அளவிற்கு அகலமான கான்கிரீட் கால்வாய்கள் வேறுஎங்கும் இல்லை. முதல்வரின் லட்சியமான மழைநீர் வெள்ளபாதிப்பு இல்லாத மாநகரமாக சென்னையை மாற்றும் திட்டங்கள் இந்தாண்டு 90% நிறைவடைந்துள்ளது. அடுத்தாண்டு 100% முடிக்கப்பட்டு, வெள்ளபாதிப்பு கண்டறியாத மாநகரமாக சென்னை மாநகரத்தை மாற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்










| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,717 | Rs.5,119 |

# பேராசிரியர் நெடுஞ்செழியன் மறைவு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்



சென்னை: நவ, 5

பேராசிரியர் நெடுஞ்செழியன் உடல்நலிவுற்ற செய்தி அறிந்து, சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற ஏற்பாடு செய்தோம். நலம் பெற்றுத் திரும்புவார் என்று நம்பினேன். அவரது உடல் அதற்கு ஒத்துழைக்காத நிலையில் மறைந்து விட்டார். அவரை இழந்து வாடும் அவர் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தமிழகமுதல்வர்ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தமிழக முதல்வர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழ்மொழிஅறிஞரும், பேராசிரியருமான க.நெடுஞ்செழியன் மறைவை அறிந்ததும் வருத்தமடைகிறேன். கடந்த ஆகஸ்ட் மாதம் அவருக்கு ' கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதை' வழங்கினேன். சக்கர நாற்காலியில் வந்து அவர் அந்த விருதைப் பெற்றார்.

2021ம் ஆண்டுக்கான கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதை பேராசிரியர் நெடுஞ்செழியனுக்கு வழங்கினேன். தமிழுக்கும், தமிழினத்துக்கும், திராவிட இயக்கத்துக்கும் தொண்டாற்றுவதற்காகத் தனது வாழ்நாளை ஒப்படைத்துக் கொண்டவர்தான் நெடுஞ்செழியன். பல்வேறு நூல்களைப் படைத்தவர். பெரியார் குறித்தும், திராவிட இயக்கம் பற்றியும் தொடர்ந்து எழுதி வருபவர். எழுதுபவர் மட்டுமல்ல, இன உரிமைப் போராளி அவர். அவருக்கு இந்த விருது தரப்பட்டது பெருமைக்குரியது ஆகும்" என்று நான் அவருக்கு வழங்கும் போது பேசினேன்.

இந்நிலையில் அவர் உடல்நலிவுற்ற செய்தி அறிந்து, சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் தங்கி சிகச்சை பெற ஏற்பாடுகளைச் செய்தோம். அமைச்சர் சுப்பிரமணியன் அவரைச் சென்று பார்த்து நலம் அறிந்து வந்தார். நலம் பெற்றுத் திரும்பி தனது அறிவுலகச் செயல்களைத் தொடர்வார் என்று பெரிதும் நம்பினேன். ஆயினும், அவரது உடல் அதற்கு ஒத்துழைக்காத நிலையில் மறைந்து விட்டார். பேராசிரியர் நெடுஞ்செழியனை இழந்து வாடும் அவர் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் என்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்

# டெல்லி மகளிர் ஆணையத்தில் புகார் அளித்த குஷ்பு ஆவேசம் !



புதுடெல்லி, நவ,5

தி.மு.க. நிர்வாகியான சைதை சாதிக் பா.ஜ., தேசிய செயற்குழு உறுப்பினர் நடிகை குஷ்பு பற்றி பொதுக்கூட்ட மேடையில் ஆபாசமாக பேசியதைக் கண்டித்து பா.ஜ., மகளிர் அணியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில், பங்கேற்ற மாநில பா.ஜ., தலைவர் அண்ணாமலை கைதாகி விடுதலையானார். சைதை சாதிக் மீது குஷ்பு இன்று டெல்லியில் தேசிய மகளிர் ஆணையத்துக்கு சென்று ஆணைய தலைவி ரேகா ஷர்மிளாவிடம் நேரில் புகார் மனு அளித்தார். அதன் பிறகு குஷ்பு நிருபர்களிடம் கூறியதாவது:-

எனக்கே இந்த கதி என்றால் மற்ற பெண்களுக்கு தமிழகத்தில் என்ன கதி ஏற்படும்? அமைச்சர் பொறுப்பில் இருக்கும் மனோ தங்கராஜ் தூங்கி விழித்து நான் விளம்பரம் தேடுவதாக கூறி இருக்கிறார். எனக்கு இனி விளம்பரம் தேவையில்லை. நானும், அவரும் பொது வெளியில் நின்றால் அவரை எத்தனை பேருக்கு அடையாளம் தெரியும்? அவருக்குத்தான் இப்போது விளம்பரம் தேவை. அவரது தலைமையில் நடந்த கூட்டத்தில் தான் இவ்வளவு அநாகரீகமாக பேசி உள்ளனர். அதை கேட்டு சிரித்துக் கொண்டிருந்த அமைச்சர், சைதை சாதிக்கை தனியாக அழைத்து கண்டித்ததாக கூறுகிறார்.

என்னிடம் யாரும் மன்னிப்பு கேட்கவில்லை. எனக்கு மன்னிப்பும் தேவையில்லை. நடவடிக்கை தான் தேவை. அமைச்சர் என்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். சைதை சாதிக்கை கட்சியில் இருந்து நீக்க வேண்டும். இது தொடர்பாக டெல்லியில் தேசிய பெண்கள் ஆணையத்தில் புகார் அளித்திருக்கிறேன். என்னைப்பற்றிபேசியவர் மீதும் அமைச்சர் மனோ தங்கராஜ் மீதும் புகார் அளித்துள்ளேன். என்னை பற்றி பேசிய பேச்சை மனோ தங்கராஜ் அமர்ந்து ரசித்துக் கொண்டிருக்கிறார். அந்த வீடியோ ஆதாரத்தையும் சமர்ப்பித்துள்ளேன். இவ்வாறு குஷ்பு கூறினார்.




# தமிழக அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை

### முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் குற்றச்சாட்டு



ஊத்துக்கோட்டை, நவ5-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், பாதிரிவேடு கிராமம், அதிமுகவை சேர்ந்த என். டி.டேவிட்குமார்-சசிகலா தம்பதிகரின் புதுமனை புகுவிழா நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதில், தமிழக முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் நேற்று மாலை கலந்து கொண்டு டேவிட்குமார்-சசிகலா தம்பதியினரை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், ஒன்றிய செயலாளர் வி.கோபால் நாயுடு, ஒன்றிய பெருந்தலைவர் கே.எம். எஸ்.சிவக்குமார், ஒன்றிய துணைச் செயலாளரும், ஒன்றிய கவுன்சிலர்கள் ஏ.டி.நாகராஜ், தேவிசங்கர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகளும், சார்பு அணி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

பின்னர், முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் பத்திரிக்கையாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: தமிழக அரசு தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. மாறாக மக்கள் விரோத ஆட்சியாக செயல்பட்டு வருகிறது. மின் கட்டண உயர்வு, சொத்து வரி உயர்வு, பால் விலை உயர்வு என பல்வேறு சுமைகளை மக்கள் மீது சுமத்தி வருகிறது என கூறினார்.

முன்னதாக புதுமனை புகுவிழா நிகழ்ச்சியில் திருவள்ளூர் வடக்கு மாவட்ட செயலாளர் சிறுணியம் பி.பலராமன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் கே.எஸ். விஜயகுமார், மாநில பொதுக்குழு உறுப்பினர் ஆர். அபிராமன், மாவட்டத் துணைச்செயலாளர் எஸ். எம்.ஸ்ரீதர், மாவட்ட அம்மா பேரவைதுணைத்தலைவர் ஜெ.ரமேஷ்குமார், இளைஞர் மற்றும் இளம் பெண்கள் மாவட்ட செயலாளர் டி.சி. மகேந்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### டி.ஆர்.எஸ்., எம்.எல்.ஏ.க்களை இழுக்க ரூ.100 கோடி பேரம்

# பா.ஜ.,வுக்கு எதிராக வீடியோ ஆதாரம்; சந்திரசேகர ராவ் வெளியீடு !



ஐதராபாத், நவ, 5-

தெலுங்கானாவில் டி.ஆர்.எஸ்., எம்.எல்.ஏ.க்களை இழுக்க ரூ.100 கோடி பேரம் பேசியது தொடர்பாக - பா.ஜ.,வுக்கு எதிராக வீடியோ ஆதாரத்தை அம்மாநில முதல்வர் சந்திரசேகர ராவ் வெளியிட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கானா மாநிலத்தில் ஆளும் டி.ஆர். எஸ்., கட்சியை சேர்ந்த எம். எல்.ஏ.,க்கள் பைலட் ரோகித் ரெட்டி, ரேகா காந்தாராவ், பால ராஜு, ஹர்ஷவர்த்தன் ஆகியோரை கடந்த வாரம் மொய்னாபாத் அஜீஸ் நகரில் உள்ள பண்ணை வீட்டில் டெல்லி ராமச்சந்திர பாரதி, ஐதராபாத் நந்தகுமார், திருப்பதி சின்மலயா ஜி ஆகியோர் சந்தித்ததாகவும், அப்போது டி.ஆர். எஸ்., கட்சியிலிருந்து விலகி பா.ஜ.,வில் சேர்ந்தால் ஒவ்வொரு எம்.எல்.ஏ.வுக்கும் தலா ரூ.100 கோடி வீதம் ரூ.400 கோடி தருவதாக பேரம் பேசியதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில், சம்பவ இடத்திற்கு சென்ற சைபராபாத் போலீசார் எம்.எல்.ஏ.,க்களுடன் பேரம் பேசிக்கொண்டு இருந்த ராமச்சந்திர பாரதி, சின்மலயா ஜி, நந்தகுமார் ஆகிய 3 பேரை கைது செய்தனர். பண்ணை வீட்டில் எம். எல்.ஏ.,க்களுடன் நடந்த சந்திப்புக்கு ஒரு வாரம் முன்னதாக எம்.எல்.ஏ., பைலட் ரோகித் ரெட்டி, ராமச்சந்திர பாரதி ஆகியோரை இடைத்தரகர் நந்தகுமார் கான்ஃபரன்ஸ் மூலம் ஃபோனில் இணைத்து உரையாடிய ஆடியோ வெளியாகி பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு இடையே சைபராபாத் போலீசாரால் கைது செய்யப்பட்ட 3 பேரும் சைபராபாத் லஞ்ச ஒழிப்புத்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். பணம் கைமாறியதற்கான ஆதாரம் இல்லாததால் 3 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இதை எதிர்த்து ஐதராபாத் உயர்நீதிமன்றத்தில் போலீசார் அவசர வழக்கு தொடுத்தனர். அப்போது நீதிபதி, 3 பேரையும் சிறையில் அடைக்க உத்தரவிட்டார். எம். எல்.ஏ.க்களுடன் பா.ஜ., பேரம் பேசிய 3 மணி நேர வீடியோ ஆதாரத்தை முதல்வர் சந்திரசேகர ராவ் வெளியிட்ட பின் கூறியதாவது:- எங்கள் கட்சி எம்.எல்.ஏ.,க்களுடன், பா.ஜ., சார்பில் பேரம் பேசிய 3 மணி நேர வீடியோ ஆதாரம் சிக்கி உள்ளது. அந்த வீடியோவை பார்த்தால் இந்த நாடு எப்படி உள்ளது. எங்கே சென்று கொண்டு இருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாக புரியும்.

இவர்கள் ஆட்சியில் அநியாயம் நடக்கிறது. பா.ஜ., ஆட்சிக்கு வந்த பிறகு பல்வேறு மாநில கட்சிகள் பாதிக்கப்பட்டு உள்ளன. அவர்களால் நானும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறேன். ஆந்திரா, தெலுங்கானா, டெல்லி, ராஜஸ்தான் முதல்வர்களை மாற்ற பா.ஜ., முயற்சி செய்து வருகிறது. இந்த நாட்டை பா.ஜ., சர்வ நாசம் செய்ய முயற்சி செய்து வருகிறது. இந்த வீடியோ ஆதாரம் குறித்து பெரிய அளவில் விசாரணை நடத்த வேண்டும். குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இந்த 3 மணி நேர வீடியோவை சிறிய அளவில் எடிட் செய்து விரைவில் அனைத்து மாநில உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் சமூக வலைதளங்களில் வெளியிடப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# மக்கள் சந்திப்பை அரசியல் ஆக்க வேண்டாம் புதுவை கவர்னர் தமிழிசை அறிவுறுத்தல்



புதுவை, நவ,5

புதுவை கவர்னர் மாளிகையில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடந்தது. கடந்த மாதம் 8-ம் தேதி நடந்த சந்திப்பின் போது போக்குவரத்துக்கு உதவியாக 3 சக்கர கைவண்டி வழங்கும்படி கவர்னரிடம் மாற்றத்திறனாளி ஒருவர் கோரிக்கை வைத்தார். இதையடுத்து இன்று நடந்த நிகழ்ச்சியில், மண்ணாடிப்பட்டு குமாரபாளையத்தை சேர்ந்த முருகன் என்ற மாற்றுத்திறனாளியிடம் 3 சக்கர வண்டியை கவர்னர் தமிழிசை வழங்கினார். இதன்பின் நிருபர்களிடம் அவர் கூறியதாவது: மக்கள் சந்திப்பின் போது ஒரு மாற்றுத்தினாளி பெண் தனக்கு வேலை வேண்டும் என்றார். 3 சக்கர வாகனம் கேட்டார். அதன்படி வாகனம் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த மக்கள் சந்திப்பில் மோட்டார் பொருத்தப்பட்ட 3 சக்கர வாகனம் ஏற்பாடு செய்து தரப்படும்.

இதுதான் மக்கள் சந்திப்பின் பலன். ஏன் மக்களை சந்திக்கிறீர்கள்?, உங்களுக்கு என்ன தார்மீக உரிமை இருக்கிறது? தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் தான் மக்களை சந்திக்கவேண்டும் என கூறுபவர்களுக்கு இந்த செயல்தான் எனது பதில். இது போல மக்களை சந்திக்கும் போது அவர்களது சிறிய, -சிறிய தேவைகளை நமது முயற்சியினால் ஓரளவு சரிசெய்ய செய்ய முடியும். எங்களால் உடனே சரி செய்துவிடக் கூடிய இன்னும் பல கோரிக்கைகளை சரி செய்துள்ளோம். ஜிப்மரில் கேட்ட உதவியை செய்துள்ளோம். மக்கள் சந்திப்பை அரசியல் ஆக்காமல் அவசியத்திற்காக, நல்ல மனது படைத்தவர்களால் செய்யப்படுகிறது என்பதை முதலில் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

நல்லதுயார்செய்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது தொடரும். மக்கள் சந்திப்பு அரசியல் கிடையாது, அவசியம் என்பதை நான் பதிவு செய்கிறேன். தமிழக கவர்னரை மாற்றம் செய்ய அரசியல் கட்சிகள் கையெழுத்து வாங்குவது ஜனநாயகத்துக்கு எதிரானது. இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகத்தில் 44 இடங்களில் ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்பு: உயர்நீதிமன்றம் அனுமதி



சென்னை, நவ. 5

வரும் 6ம் தேதி தேதி கோவை, திருப்பூர், கன்னியாகுமரி மாவட்டங்களை தவிர மற்ற 44 இடங்களிலும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அணிவகுப்பு நடத்த காவல்துறை அனுமதி வழங்க வேண்டும் என்று உயர்நீதிமன்ற நீதிபதி இளந்திரையன் உத்தரவு பிறப்பித்தார்.

தமிழகத்தில் கடந்த மாதம் 2-ம் தேதி ஆர்.எஸ். எஸ்.தரப்பில் அணிவகுப்பு நடத்த காவல்துறை தரப்பில் அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து அந்த அமைப்பை சேர்ந்த 50-க்கும் மேற்பட்டோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், தமிழகத்தில் நவம்பர் 6ம் தேதி ஆர்.எஸ். எஸ். அணிவகுப்பு நடத்த நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கும்படி காவல் துறைக்கு உத்தரவிட்டிருந்தது. ஆனால், பல இடங்களில் அனுமதி வழங்கப்படவில்லை எனக் கூறி காவல்துறைக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் உயர்நீதிமன்ற நீதிபதி இளந்திரையன் முன் கடந்த 2ம் தேதி விசாரணைக்கு வந்த போது தமிழகத்தில் 3 இடங்களில் மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தமிழக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், 23 இடங்களில் உள்ளரங்கு கூட்டமாக நடத்திக் கொள்வதாக இருந்தால் அதற்கு அனுமதி வழங்க காவல்துறை தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, 47 இடங்களில் அணிவகுப்பிற்கு அனுமதி வழங்க வேண்டுமா?, வேண்டாமா? என்பது குறித்து நவம்பர் 4ம் தேதி உத்தரவு பிறப்பிப்பதாக தெரிவித்திருந்தார்.

அதன்படி, இன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. வரும் 6ம் தேதி தேதி கோவை, திருப்பூர், கன்னியாகுமரி மாவட்டங்களை தவிர மற்ற 44 இடங்களிலும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அணிவகுப்பு நடத்த காவல்துறை அனுமதி வழங்க வேண்டும் என்று நீதிபதி இளந்திரையன் உத்தரவு பிறப்பித்தார். உளவுத்துறை அறிக்கைகளை ஆய்வு செய்த பின் கோவை, பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், நாகர்கோவில், அருமனை, பல்லடம் ஆகிய இடங்களில் ஆர். எஸ்.எஸ். அணிவகுப்புக்கு அனுமதி இல்லை என்றும் மற்ற 44 இடங்களில் காவல்துறை அனுமதி வழங்கவேண்டும் என்றும் தமது உத்தரவில் நீதிபதி தெரிவித்துள்ளார்.

# ஆம்ஆத்மி குஜராத் முதல்வர் வேட்பாளர் இசுதான்காத்வி: அர்விந்த்கெஜ்ரிவால் அறிவிப்பு



புதுடெல்லி: நவ,5

ஆம்ஆத்மி கட்சியின் குஜராத் முதல்வர் வேட்பாளராக இசுதான்காத்வி தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளார்.

பஞ்சாப் சட்டப்பேரவைக்குத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாக ஆம்ஆத்மி கட்சி சார்பில் முதல்வர் வேட்பாளராக யார் வரவேண்டும் என்பது குறித்து அக்கட்சி கருத்துகேட்பு நடத்தியது. இதில் பகவந்த்மானுக்கே அதிக வாக்குகள் கிடைத்தன. இதையடுத்து, அவரே முதல்வர் வேட்பாளராக களமிறக்கப்பட்டார். தேர்தல் வெற்றியை அடுத்து அவர் முதல்வராகவும் பதவி வகித்து வருகிறார்.

இந்நிலையில், அதே அணுகுமுறையை குஜராத்திலும் ஆம்ஆத்மி தொடங்கி இருக்கிறது. சூரத்தில் கடந்த அக்டோபர் 29ம் தேதி செய்தியாளர்களிடம் பேசிய ஆம்ஆத்மியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அர்விந்த்கெஜ்ரிவால், ஆம்ஆத்மியின் குஜராத் முதல்வர் வேட்பாளராக யார் வரவேண்டும் என்பது குறித்து குஜராத் மக்களே தீர்மானிக்கலாம் என தெரிவித்தார்.

இதற்காக ஆம் ஆத்மியின் முன்னணி லைவர்களான குஜராத் மாநில ஆம்ஆத்மி கட்சித்தலைவர் கோபால்இத்தாலியா, தேசிய பொதுச்செயலாளர் இசுதான்காத்வி, பொதுச்செயலாளர் மனோஜ்சொராதியா உள்ளிட்டோரின் பெயர்களை கட்சி பரிந்துரைத்தது. இவர்களில் யாராவது ஒருவரை தேர்வு செய்து அதனை, 6357000360 என்ற மொபைல் எண்மூலம் தொடர்பு கொண்டோ, வாட்ஸ்ஆப் மெசேஜ் மூலமோ, வாய்ஸ் மெசேஜ் மூலமோ தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டது. aapnocm@gmail.com என்ற இ-மெயில் முகவரி மூலமும் விருப்பத்தை தெரிவிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. நவம்பர் 3ம் தேதி வியாழக்கிழமை மாலை 5 மணிவரை பொதுமக்கள் இவ்வாறு தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்கலாம் என கூறி இருந்த ஆம்ஆத்மி கட்சி, முடிவு நவம்பர் 4ம் தேதி நேற்று அறிவிக்கப்படும் என தெரிவித்திருந்தது.

அதன்படி, நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் டெல்லி முதல்வரும் ஆம்ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளருமான அர்விந்த்கெஜ்ரிவால் முடிவை அறிவித்தார். குஜராத் முதல்வர் வேட்பாளருக்கு நடைபெற்ற வாக்கெடுப்பில் இசுதான்காத்வி 73 சதவீத வாக்குகளை பெற்றுள்ளதாக அவர் கூறினார். இதைஅடுத்து, மேடையில் இருந்த இசுதான்காத்விக்கு கட்சி நிர்வாகிகள் அனைவரும் வாழ்த்து தெரிவித்தனர்.

# காரைக்கால் மாவட்ட கல்வித்துறை சார்பாக தந்தை பெரியார் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தின விழா நிகழ்வு

காரைக்கால், நவ.5–

புதுவை அரசு காரைக்கால் மாவட்ட கல்வித்துறை சார்பாக நேற்று மாலை தந்தை பெரியார் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தின விழா நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் புதுவை மாநில போக்குவரத்து துறை அமைச்சர் . சந்திர பிரியங்கா தலைமை வகித்தார்கள். மேலும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் எல்.முகமது மன்சூர் முன்னிலை வகித்தார்கள்.



இந்நிகழ்வில் மேல்நிலை கல்வி துணை இயக்குனர் ராஜேஸ்வரி காரைக்கால் மாவட்டம் முதன்மை கல்வி அதிகாரி ராஜசேகரன் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் ஊழியர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்வில் மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பில் முதல் இடம் பெற்ற மாணவி டி.சபீரா (475/500) அன்னை தெரசா பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு சுழற்கேடயம் மற்றும் ஐந்தாயிரம் பரிசு பணம் அமைச்சர் வழங்கினார்.

மேலும்ஜி.பி.எஸ்பூவம், ஜி.பி.எஸ் கண்ணாபூர், மற்றும் ஜி.பி.எஸ்.பிள்ளை தெருவாசல் ஆகிய மூன்று பள்ளிகளுக்கு தேசிய அளவில்சுவிச்வித்யாலயா புரஸ்கார் விருது பெற்றமைக்காக விருதுகள் வழங்கப்பட்டன. மேலும் 2020-21 ஆம் ஆண்டு நல்லாசிரியர் விருது பெற்ற நான்கு ஆசிரியர்களுக்கு பாராட்டுமற்றும்விருதுகள் வழங்கப்பட்டன. மேலும் 2022 -ஆம் ஆண்டு நல்லாசிரியர் விருது பெற்ற நான்கு ஆசிரியர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

மேலும் 12 -ஆம் வகுப்பில் மற்றும் பத்தாம் வகுப்பில் 100% சதவீதம் தேர்ச்சி பெற உருதுணையாக இருந்த ஆசிரியர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. மேலும் பேச்சுப்போட்டி கவிதை போட்டி கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

## ஆரணி ஆற்றில் புதுப்பாளையம்-மங்களம் தரைப்பாலங்கள்

# வடகிழக்கு பருவ மழையால் நீரில் மூழ்கியது: உயர் மட்ட மேம்பாலம் கட்டித் தர பொதுமக்கள் கோரிக்கை

ஊத்துக்கோட்டை, நவ5–

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த புதுப்பாளையம் - அஞ்சாத்தம்மன் கோவில் இடையே ஆரணி ஆற்றில் தரைப்பாலம் ஒன்று உள்ளது.



இதேபோல், கும்மிடிப்பூண்டி ஒன்றியம் மங்களம் ஊராட்சியில் மங்களம்– ஆரணி இடையே ஆரணி ஆற்றில் பொதுமக்கள் சார்பில் அமைக்கப்பட்ட மண்சாலை ஒன்றுஉள்ளது. இந்நிலையில்,கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவ மழை பெய்ததால் ஆரணி ஆற்றில் பெரியபாளையம் அருகே பாலேஸ்வரம் அணைக்கட்டு நிரம்பியது.

இதனால் இந்த அணைக்கட்டில் இருந்து தண்ணீர் ஆரணி ஆற்றில் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் புதுப்பாளையம்,மங்களம் ஆகிய கிராமங்களில் உள்ள தரைபாலம் மற்றும் மண் சாலை மீது தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் பள்ளி, கல்லூரிகள் செல்லும் மாணவர்களும், தனியார் மற்றும் அரசு துறை பணியாளர்கள், விவசாயிகள், வியாபாரிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே,இப்பகுதியில் உயர் மட்ட மேம்பாலங்கள் அமைத்துதரவேண்டும்என கும்முடிபூண்டி சட்டமன்ற உறுப்பினர்,திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம்,தமிழக அரசு உள்ளிட்டோருக்கு இப்பகுதிமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சென்னை அரசு பள்ளியில் குளம் போல் தேங்கி நின்றமழைநீர் உடனடியாக அகற்றி தீர்வுகண்ட எம்.எல்.ஏ

திருவொற்றியூர், நவ ,5

சென்னை திருவொற்றியூரில் ஜெயகோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது இங்கு 1800க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர்.



வடகிழக்கு பருவ மழை தீவிரத்தினால் கடந்த மூன்று நாட்களாக கனமழை விட்டு பெய்து வருகிறது. நேற்று முன் தினம் பெய்த கனமழையால் சென்னையில் பள்ளிகள் விடுமுறை அளிக்கப்பட்டதால் மாணவர்கள் யாரும் பள்ளிக்கு வரவில்லை நேற்று முன் தினம் மாலை பெய்த கனமழையின் காரணமாக ஜெயகோபால் கரடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் மைதானத்தில் முழங்கால் அளவு மழைநீர் தேங்கியுள்ளது.


பள்ளிதலைமை ஆசிரியர் சீனிவாசன் சட்டமன்ற உறுப்பினர் கே பி சங்கரிடம் தகவல் தெரிவித்தார் இதனை அறிந்த திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே. பி. சங்கர் உடனடியாக பள்ளிக்கு விரைந்து வந்து பார்வையிட்டார்.


உடனடியாக ஜேசிபி இயந்திரம் வரவழைக்கப்பட்டு பத்து அடி பள்ளம் தோண்டி தண்ணீரை அகற்ற நடவடிக்கை எடுத்து தண்ணீரை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

# 'ஆவின் ஆரஞ்சு நிற பாக்கெட் பால் விலை உயர்வு மக்களை பாதிக்காது' – அமைச்சர் நாசர் விளக்கம்

சென்னை, நவ. 5

"தமிழகத்தில் ஆவின் ஆரஞ்சு நிற பாக்கெட் பாலை ஏற்கெனவே 11 லட்சம் பேர் வாங்குகின்றனர். இந்த பாலை சந்தா அட்டைகளைப் பயன்படுத்தி வாங்குபவர்களுக்கு அதே விலைதான். மாற்றமில்லை. அவர்களுக்கு இந்த பால் ரூ.48-க்கும், வணிக பயன்பாட்டிற்கு வாங்குபவர்களுக்கு மட்டும் ரூ.60-க்கும் விற்பனை செய்கிறோம்" என்று தமிழக பால்வளத்துறை அமைச்சர் நாசர் தெரிவித்துள்ளார்.





சென்னை தலைமைச் செயலகத்தில் பால்வளத்துறை அமைச்சர் நாசர் நேற்று (நவ.4) செய்தியாளர்களைச் சந்தித்து கூறியதாவது: ஆவினில் பால் கொள்முதல் விலையை, பசும்பால் லிட்டருக்கு ரூ.32ல் இலிருந்து ரூ.35 ஆகவும், எருமைப்பால் லிட்டருக்கு ரூ.41-ல் இருந்து ரூ.44- ஆகவும் உயர்த்தப்பட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை முதல்வர் ஸ்டாலின் உயர்த்தியிருக்கிறார். இந்த பால் விலையேற்றம் சாதரண மக்களை எந்தவகையிலும் பாதிக்காது. வாணிப நோக்கத்தோடு விற்பனை செய்யப்படுகிற ஆரஞ்சு நிற பாக்கெட் பாலுக்கான விலை மட்டும்தான் உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கு முன் ரூ.48-க்கு விற்பனை செய்து வந்தோம், இதே நிறை கொழுப்பு பாலை மற்ற மாநிலங்களிலும் மற்ற தனியார் நிறுவனங்களும் ஏறக்குறைய ரூ.70-வரை விற்பனை செய்கின்றனர். பா.ஜ.க., ஆளுகின்ற குஜராத் உள்ளிட்ட மற்ற மாநிலங்களில் விற்பனை செய்யப்படும் விலையை விட ரூ.10 குறைவாக, அதாவது ரூ.60-க்கும் விற்பனை செய்யப்படவுள்ளது.

தமிழகத்தில் ஆரஞ்சு நிற பாக்கெட் பாலை ஏற்கெனவே 11 லட்சம் பேர் வாங்கி வருகின்றனர். இந்த பாலை சந்தா அட்டைகளைப் பயன்படுத்தி வாங்குபவர்களுக்கு அதே விலைதான், அதில் எந்த மாற்றமும் கிடையாது. அவர்களுக்கு இந்த பால் ரூ.48-க்கும், வணிக பயன்பாட்டிற்காக வாங்குபவர்களுக்கு மட்டும் ரூ.60-க்கும் விற்பனை செய்கிறோம். மத்திய அரசு பாலுக்கும் ஜி.எஸ்.டி., விதித்துள்ளது. இதனால் விற்பனை விலை உயர்ந்துள்ளது. இருந்தாலும், மக்களை பாதிக்காத வகையில்தான் இந்த விலை உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.



▶ நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் வெள்ளப்பள்ளம் ஊராட்சி மன்மதன்கோவில் தெருவில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் சாலை அமைக்கும் பணிகள் நடைபெறுவதை மாவட்ட கலெக்டர் அ.அருண்தம்புராஜ், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



▶ காரைக்காலில் மதகடியில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் அமைச்சர் அலுவலகத்தில் புதுவை மாநில போக்குவரத்து துறை அமைச்சர் சத்திய பிரியங்கா தலைமையில் மத்திய அரசின் ஸ்வமித்துவா திட்டத்தின் கீழ் வருவாய்துறை மூலம் கிராம பகுதிகளில் எல்.ஜி.ஆர்.குடியிருப்பில் குடியிருக்கும் பட்டாதாரர்களுக்கு ட்ரோன் மூலம் அளவீடு செய்து புதிய சொத்து விபரங்கள் அடங்கிய அடையாள அட்டையினை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் முதல் கட்டமாக நெடுங்காடு தொகுதிக்கு உட்பட்ட 163 பயனாளிகளுக்கு புதிய சொத்து விவரங்கள் அடங்கிய அடையாள அட்டையினை போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) ஆதர்ஷ் வட்டாட்சியர் மதன்குமார் மற்றும் அரசு அதிகாரிகள் பயனாளிகள் உடன் இருந்தனர்.



▶ ஆரணியில் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தின் வழக்கறிஞர்கள் சங்கத்தின் 2022-23. ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்க தேர்தல் அதிகாரியாக வக்கீல் கைலாஷ் முன்னிலையில் தேர்தல் நடைபெற்றதில் புதிய நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் தலைவராக ராஜமூர்த்தியும், செயலாளராக ஏழுமலை, பொருளாளராக அமுல்குமாரும், து.தலைவர் ஸ்ரீதர், இணை செயலாளர்களாக சண்முகம், ராஜேஷ், பரசுராமன் ஆகியோரும், நூலகராக தணிகாசலம், ஆடிட்டராக அறிவழகன் ஆகியோரை ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு வழக்கறிஞர்கள் அனைவரையும் வாழ்த்தினர்.



▶ மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வடகிழக்கு பருவ மழைக்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுக்கான கூட்டம் கோட்டாட்சியர் யுரேகா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வட்டாட்சியர் கோமதி, சமூக பாதுகாப்பு தனி வட்டாட்சியர் சண்முகம், மண்டல துணை வட்டாட்சியர் சுந்தர், மற்றும் வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், நில அளவை பிரிவு அலுவலர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.



▶ காரைக்கால் மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையின் பேரில் காரைக்கால் முல்லை நகரில் அமைந்துள்ள பெண்கள் தங்கும் விடுதியில் உள்ள சுற்று வட்டாரத்தில் தண்ணீர் தேங்கி இருப்பதை அறிந்து காரைக்கால் பொதுப்பணித்துறை, காரைக்கால் நகராட்சி நிர்வாகம் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் வீரசெல்வம் கூறுகையில் சரியான வடிகால் வசதி இல்லாத காரணத்தால் தண்ணீர் தேங்கி நிற்பதாகவும் இது சம்பந்தமாக நிரந்தர தீர்வு காணப்படும் என்றும் நகராட்சி நிர்வாகத்தின் மூலம் தற்சமயம் தண்ணீர் வெளியேற்றும் பணி நடைபெற்று வருவதாகவும் தேங்கிய தண்ணீரை புளியங்கொட்டை சாலை வழியாக அமைந்துள்ள வாய்க்காலில் அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது நிரந்தரமாக இந்த பள்ளமான பகுதிகளை மண்கொட்டி உயர்த்தப்படும் என்றும் கூறினார்கள். இதன் மூலம் பிரச்சனைக்கு தீர்வு காணப்படும் என்றும் கூறினார். இந்நிகழ்வில் காரைக்கால் துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) ஆதர்ஷ் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் வீரசெல்வம் மற்றும் ஆதிதிராளர் நலத்துறை உதவி இயக்குனர் த மதன்குமார் மற்றும் நகராட்சி அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# ஆரணி அருகே ராஜ ராஜ சோழன் 1037 வது பிறந்தநாளில் சிலைக்கு சிறப்பு பூஜை

ஆரணி. நவ.5–

ஆரணி அருகேயுள்ள திருமலை குந்தகைசமணர் கோயிலில் ராஜராஜ சோழனின் 1037 வது பிறந்தநாளையொட்டி அவரது சிலைக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.



திருவண்ணாமலை மாவட்டம் போளூர் தாலுகாவடமாதிமங்கலம் அருகேயுள்ள திருமலை கிராமத்தில் அமைந்துள்ள குந்தகை சமணர் கோயில் வளாகத்தில் ராஜராஜ சோழன் 1037 வது பிறந்தநாளையொட்டி சதய விழா நிகழ்ச்சி கொண்டாடப்பட்டது. ராஜ ராஜ சோழனின் சிலைக்கு பால், நெய், சந்தன அபிஷேகம் செய்து சிறப்பு வழிபாடு நடந்தப்பட்டது.

ராஜ ராஜ சோழனின் தங்கையான குந்தகை நாச்சியார் சமண கோயிலை கட்டி தந்ததாக வரலாற்றில் அமைந்துள்ளதின் நினைவாக திருமலை சமண கோயிலில் ராஜராஜசோழனின் சிலை நிறுவப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் ராஜராஜ சோழனின் பிறந்தநாளில் சதய விழா கொண்டாடப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் சமண மடாதிபதி சுவாமிகள், கிராம பொதுமக்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்

# ஆரணி அருகே 5 அடி கோதும நாகம் தீயணைப்பு வீரர்களால் பிடிப்பட்டது

ஆரணி. நவ.5–

ஆரணி அருகேசேவூர் பஞ்சாயத்திற்கு உட்பட்ட இ.பி நகர் நெல்அறுவடை இயந்திரம் வாகனம் ஓட்டுநர் வீட்டில் 5 அடி கோதும நாகம் புகுந்து உள்ளதை, தீயணைப்பு மற்றும் மீட்பு துறையினர் கோதும நாகத்தை பிடித்து வனகாட்டில் விட்டனர்.



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அடுத்த சேவூர் பஞ்சாயத்திற்கு உள்பட்ட இ.பி நகர் பகுதியிலுள்ள கண்ணி கோயில் தெருவை சேர்ந்தவர் அமிர்தராஜ் இவர் நெல்அறுவடை இயந்திர வாகன ஓட்டுநர் ஆவார். இவரது வீட்டில் நேற்று பிற்பகலில் சுமார் 5அடி நீளம் கொண்ட கோதும நாகம் ஒன்று புகுந்து உள்ளது இதனை கண்ட அவரது மனைவி கண்டு அதிர்ச்சி அடைந்து பின்னர் பக்கத்து வீட்டில் உள்ளவர்களிடம் உதவிக்கு அழைத்தனர்.

இதுகுறித்து ஆரணி தீயணைப்பு மற்றும் மீட்பு துறையினருக்கு பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் உதவியுடன் தகவல் கொடுத்ததையடுத்து, ஆரணி தீயணைப்பு மற்றும் மீட்பு துறை நிலைய அலுவலர் கோபால் கிருஷ்ணன் தலைமையில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, 5 அடி நீளம் கொண்ட கோதும நாகத்தை பிடித்து, வனகாப்பமான வெட்டியாந் தொழுவம் காட்டில் விட்டனர்.

# வேலூர் மாவட்டத்தில் மாநில கல்விக் கொள்கைக்கான கருத்து கேட்பு கூட்டம்

வேலூர் நவ,05–

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதேமில்லத் கூட்டரங்கில் மாநில கல்விக் கொள்கை உயர்மட்டக் குழுவினர் நடத்திய மண்டல அளவிலான கருத்துக்கேட்புகூட்டத்தில் உயர்மட்டக்குழு தலைவர் நீதியரசர் த.முருகேசன் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களை சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள், தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், ஓய்வுப் பெற்ற ஆசிரியர்களிடம் கல்வி கற்ப்பிக்கும் முறை பள்ளிகள் கல்லூரிகளில் உள்ள நிறை குறைகள் குறித்து கருத்துகளை கேட்டறிந்தனர்.



உடன் மாவட்ட ஆட்சியர் பெ.குமாரவேல் பாண்டியன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆர்த்தி, முதன்மைக் கல்வி அலுவலர் முனுசாமி, கல்வித் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் மாணவ மாணவிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# சீர்காழி அருகே விவசாயிகள் சாலை மறியல் போராட்டம்

சீர்காழி, நவ. 5 –

தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவ மழை காரணமாக கடந்த ஒரு வாரங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு சீர்காழி பகுதியில் விடிய விடிய 22 சென்டிமீட்டர்கொட்டி தீர்த்த கனமழையால் சீர்காழி அருகே திருமுல்லைவாசல் ஊராட்சிக்குட்பட்ட திருமுல்லைவாசல்,ராதா நல்லூர், வழுதலைக்குடி, எடமணல், வருஷத்து உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் இந்த ஆண்டு சம்பா நடவு மற்றும் நேரடி நெல் விதைப்பு செய்திருந்தனர்.



இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு பெய்த தொடர் மழையாலும் கடலின் சீற்றம் அதிகரித்ததால் வலுவிழுந்த உப்பனாற்று கரைகள் உடைக்கப்பட்டு கடல் நீர் உட்பகுந்ததால் திருமுல்லைவாசல், ராதநல்லூர், விடுதலைக்குடி, வருஷபத்து உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி செய்திருந்த சம்பா நெற்பயிர்கள்கடல்நீரால் முழுகிவெள்ளைக்கடாக காட்சியளிக்கிறது.

பாதிக்கப்பட்ட இடங்களை அதிகாரிகள் பார்க்க வராததை கண்டித்தும், உப்பனாறு கரைகளை பலப்படுத்தாத பொதுப்பணித்துறை அதிகாரிகளை கண்டித்தும் திருமுல்லைவாசல்சாலை வழுதலைகுடி என்ற இடத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்த வேளாண்மை துறை அதிகாரிகள், வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் நேரில் வந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை ஈடுபட்டனர். மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் அரசுசார்பில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும், உப்பு நீர் விளைநிலங்களுக்குள் புகாத வகையில் பொதுப்பணித்துறை சார்பில்உரியநடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்ததன் பேரில் சாலை மறியல் போராட்டத்தை விளக்கிக் கொண்டனர். இந்த சாலை மறியல் போராட்டத்தால்சீர்காழி- திருமுல்லைவாசல் சாலையில் சுமார் 30 நிமிடம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது

ஊராட்சி மன்ற பெண் தலைவர்களுக்கு சுதந்திரம்

# கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் உறுதி

**கந்தர்வகோட்டை, நவ.5–**

கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெண் ஊராட்சி மன்றத் தலைவர்களை சுதந்திரமாக செயல்பட ஊக்குவிக்க வேண்டும் என ஒன்றிய குழுத் தலைவர் ஆர்.ரத்தினவேல் கார்த்திக் தெரிவித்தார்.



கந்தர்வகோட்டையில் ஊராட்சி ஒன்றிய குழு கூட்டம் நடைபெற்றது. கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றிய குழுவின் 15வது கூட்ட அரங்கில் ஒன்றிய குழுத் தலைவர் ஆர்.ரத்தினவேல் கார்த்திக் தலைமையில் நடைபெற்றது, ஒன்றிய குழு துணைத் தலைவர் செந்தாமரை வடிவேல் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதரன் (கி. ஊ), திலகவதி (வ. ஊ) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் எம். பரமேஸ்வரி வரவு,செலவு கணக்கினை வாசித்தார், கூட்டத்தில் பேசிய கோமாபுரம் ஒன்றியக் குழு உறுப்பினர் பாண்டியன், மக்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்க்க வேண்டும் என்றார். கந்தர்வகோட்டை ஒன்றியக் குழு உறுப்பினர் ராஜேந்திரன் பேசுகையில் ரோட்டில் சுற்றி திரியும் மாடுகள், நாய்கள், பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்த வேண்டும். கந்தர்வகோட்டை பேருந்து நிலையத்தை முறையாக செப்பனிட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். புதுநகர் ஒன்றியக்குழு உறுப்பினர் கலியபெருமாள் பேசும்போது பட்டுக்கோட்டை சாலையில் உள்ள மீன் கடைகளால் பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படுகிறது. மீன்கடைகளுக்கு அதற்குரிய பகுதியில் கொண்டு செல்ல வேண்டும். சாலையில் உள்ள மின்விளக்குகளை முறையாக பராமரித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு பதில் அளித்து பேசிய ஒன்றிய குழுத் தலைவர் ஆர். ரத்தினவேல் கார்த்திக் கந்தர்வகோட்டை பேருந்து நிலையத்தை செப்பனிட மாவட்ட கலெக்டரிடம் இருந்து ஏறத்தாழ ரூ.35 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, பேருந்து நிலையம் விரைவில் பணி தொடங்க ஏற்பாடு செய்யப்படும். புதுக்கோட்டை மாவட்டத்தில் கலெக்டர், கோட்டாட்சியர், மாவட்ட போலீஸ் எஸ்.பி., போன்ற உயர் பதவிகளை பெண்கள் அலங்கரிக்கும் போது கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெண் ஊராட்சி மன்றத் தலைவர்களை சுதந்திரமாக செயல்பட ஊக்குவிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மேலும், உறுப்பினர்களின் கோரிக்கைகள் அனைத்தையும் நிதிநிலைக்கு ஏற்ப நிறைவேற்றப்படும் என்றார். கூட்டத்தில் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் பரிமளா கண்ணன், நதியாபழனிச்சாமி, வைரகண்ணு, கோவிந்தராசு, பாரதிபிரியா அய்யாதுரை, முருகேசன், சுதா ராஜேந்திரன், திருப்பதி மற்றும் கந்தர்வகோட்டை தலைமை மருத்துவர் ராதிகா மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தர்மபுரம் மாநிலத்திற்கு சொந்தமான சட்டை நாதர் திருக்கோயில் உள்ளது இந்த கோவிலில் பிரம்மபுரீஸ்வரர் திருநிலை நாயகி அஷ்டபைரவர் சட்டைநாதர் ஆகியோர் தனி சன்னதியில் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றன இந்த கோவிலுக்கு தினந்தோறும் உள்ளூர் மற்றும் வெளியூர்களிலிருந்து ஏராளமான சாமி தரிசனம் செய்து வருகின்றன இந்நிலையில் நேற்று ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பால கும்ப குருமுனி என்கின்ற தக்கா யூகி என்பவர் தலைமையில் ஏராளமானோர் நேற்று சீர்காழி சட்டை விநாயகர் கோவிலுக்கு நேரில் வந்து இந்து முறைப்படி சாமி தரிசனம் செய்தனர் இவர்களுக்கு கோவில் சார்பில் சிறப்பு வரவேற்பு வழங்கப்பட்டது தொடர்ந்து சீர்காழி அருகே உள்ள வைத்தீஸ்வரன் கோவிலில் வைத்தியநாத சுவாமி தையல்நாயகி அம்மன் தன்வந்திரி கங்காரகன் ஆகிய சந்ததிகளில் சிறப்பு வழிபாடு செய்தனர்

# ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு10 அடி நிரம்பிய கோவில் குளம் பக்தர்கள் மகிழ்ச்சி குளத்தில் இருந்த குப்பைகள் கழிவுகள் அகற்றம்

*சென்னை , நவ. 05–*

*வடகிழக்கு பருவ மழை தாக்கத்தினால் சென்னை திருவொற்றியூர் தியாகராஜ சுவாமி வடிவுடையம்மன் திருக்கோவிலில் 6 ஆண்டுகளுக்கு பிறகு ஆதிசேஷ குலத்தில் மழை நீர் நிரம்பி வருகிறது பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.*



*2000 ஆண்டுகள் பழமை வாய்ந்த பூலோக கைலாயம் என்று அழைக்கப்படும் வரலாற்று சிறப்புமிக்க திருவொற்றியூர் தியாகராஜ சுவாமி வடிவுயம்மன் கோவில் ஆதிசேஷ குலத்தில் மழை நீர் நிரம்பியதால் பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.*

*கோவிலுக்கு வெளியே உள்ள ஆதிசேஷ குளத்திற்கு தண்ணீர்வரும் மதகுகள் அடைக்கப்பட்டு சரியாக தூர்வாராரப்படாமல் கடந்த 2016 ஆம் ஆண்டுக்கு பிறகு பல ஆண்டுகளாக நீர் இல்லாமல் வற்றி காய்ந்து சிறுவர்கள் விளையாட்டு மைதானமாக மாறி இருந்தது.*

*இதனை அடுத்து மழை வருவதற்கு முன்பாகவே திருவொற்றியூர் மாநகராட்சி மண்டல குழு தலைவர் தனியரசு மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் சுற்றுவட்டாரத்தில் இருந்து மழைநீர் குழாய்கள் வழியாக குளத்திற்கு நீர் வரும் வகையில் கட்டமைப்பு பணிகளை மேற்கொண்டனர்.*

*இதனைத் தொடர்ந்து வடகிழக்கு பருவமழை கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வந்ததால் சுற்று வட்டார மழை நீர் புதிதாக கட்டமைக்கப்பட்ட குழாய்கள் வழியாக குளத்திற்கு வந்தது.*

*இதனால் சுமார் 6 ஆண்டுகளாக நீர் வற்றி கிடந்த வடிவுடையம்மன் கோயில் ஆதிசேஷ குளத்தில் பத்தடி உயரத்துக்கு மழை தண்ணீர் நிரம்பி உள்ளது. இதனை அடுத்து திருவொற்றியூர் மண்டல குழு தலைவர் தனியரசு, மாநகராட்சி உதவி ஆணையர் சங்கரன் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் குளத்தை பார்வையிட்டு தூய்மை பணியாளர்களை வைத்து குளத்தில் தேங்கி இருந்த குப்பைகளை கழிவுகளையும் அகற்றினர்.*

# ஆலங்குடி அருகே வெறிநாய் கடித்து ஆடுகள் பலி பாதிக்கப்பட்டோர் சாலைமறியல் போராட்டம்

ஆலங்குடி, நவ. 05–

ஆலங்குடி அருகே வடகாட்டில் வெறிநாய்கள் கடித்து ஆடுகள் பலியானதை அடுத்து வெறிநாய்களை பிடித்து அப்புறப்படுத்த கோரி ஆடுகளின் சடலத்தை சாலையில் போட்டு பாதிக்கப்பட்டோர் சாலைமறியலில் ஈடுபட்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே வடகாடு ஊராட்சி குருந்தடிபுஞ்சையை சேர்ந்தவர் பாலச்சந்திரன் மனைவி ராஜாத்தி. இவர் ஆடுகளை வளர்த்து வருகிறார், ராஜாத்தி நேற்று மாலை ஆடுகளை மேய்ச்சல் முடிந்து தனது வீட்டில் கட்டி வைத்திருந்தார், அப்போது மூன்று வெறிநாய்கள் ராஜாத்தி வீட்டில் இருந்த ஆடுகளை கடித்து குதரியது. இதில், 8 ஆடுகள் சம்பவ இடத்திலேயே பாரிதாபமாக பலியானது.

வடகாடு ஊராட்சியில் இது போன்று சம்பவம் தொடந்து நடைபெறுவதாகவும், கடந்த மூன்று மாதத்தில் 100க்கும் மேற்பட்ட ஆடுகள் இது போன்று வெறிநாய்கள் கடித்து பலியானதாகவும், பலமுறை வெறிநாய்களை பிடித்து அப்புறப்படுத்தக் கோரியும் இதுவரை நடிவடிக்கை எடுக்காததைக் கண்டித்தும் பலியான ஆடுகளுக்கு உரிய இழப்பீடு வழங்கக்கோரியும் வடகாடு பெரியகடை வீதியில் விவசாயிகள், பொதுமக்கள் பலியான ஆடுகளின் சடலத்தை வைத்து சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் புதுக்கோட்டை பட்டுக்கோட்டை சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சாலைமறியலில் ஈடுபட்டவர்களிடம் வடகாடு காவல்துறையினர் பேச்சுவார்த்தை நடத்தினர், இதில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியதையடுத்து சாலைமறியலை கைவிட்டு பொதுமக்கள் கலைந்து சென்றனர். வீட்டில் இருந்த ஆடுகளை தொடந்து வெறிநாய்கள் கடித்து உயிரிழக்கும் சம்பவத்தால் அப்பகுதி பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

# அறந்தாங்கியில் நகரசபை கூட்டம்



அறந்தாங்கி, நவ.5–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி நகராட்சிக்கு உட்பட்ட 12வது வார்டில் நகர சபைகூட்டம் நகராட்சித்தலைவர் ஆனந்த் தலைமையில் நடந்தது.

கூட்டத்தில், வளையல்காரத்தெரு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பக்கவாட்டில் உள்ள சாலையில் மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைப்பதோடு பழுதடைந்த சாலை சரி செய்து புதிதாக சாலை வசதி அமைக்க வேண்டும். நகராட்சிக்கு சொந்தமான வளையல்காரத் தெருவில் உள்ள பழைய சாலையை அளவிட்டு புதிதாக சாலை அமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்தனர். நகர சபா கூட்டத்தில் 12வது வார்டு உறுப்பினர் விஸ்வமூர்த்தி நகராட்சி துணைத் தலைவர் முத்து, தி.மு.க., பொதுக்குழு உறுப்பினர் கலைமணி, நகராட்சி 12வது வார்டு பகுதி பொதுமக்கள் என 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# மக்கள் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்படும் அரியலூர் நகராட்சி பகுதி சபா கூட்டத்தில் உறுதி

அரியலூர், நவ.5–

அரியலூர் நகராட்சியில் நடந்த பகுதி சபா கூட்டத்தில் மக்கள் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்படும் என்று எம்.எல்.ஏ., கு.சின்னப்பா உறுதியளித்தார்.



அரியலூர் நகராட்சிக்கு உட்பட்ட 12, 15, 16, 2, 4, 5, 6 உள்ளிட்ட வார்டுகளில் நடந்த, பகுதி சபா கூட்டங்களுக்கு, அரியலூர் நகராட்சித் தலைவர் சாந்தி கலைவாணன் தலைமை வகித்தார். நகராட்சி ஆணையர் சித்ரா சோனியா, நகராட்சி பொறியாளர் தமயந்தி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். ஆங்காங்கு நடந்த பொதுமக்கள் குறை கேட்பு கூட்டங்களில், சம்பந்தப்பட்ட வார்டு கவுன்சிலர்கள் மலர்கொடி மனோகரன், ராணி சந்திரசேகரன், ராஜேஷ், புகழேந்தி, செல்வராணி பரமேஸ்வரன், கண்ணன், அருண் கலைவாணன், ரேவதி ராமு உள்ளிட்டோர் வரவேற்று பேசினர்.

அரியலூர் நகராட்சி 15–வது வார்டு, கீழத் தெருவில் உள்ள ரேஷன் கடையை மாற்றம் செய்யும் முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும். கவரத்தெரு மற்றும் கீழத்தெரு பொதுமக்களின் நலனை கருதி, அப்பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையை இடமாற்றம் செய்ய வேண்டும். கீழத்தெருவில் புதிய ரேஷன் கடை கட்டிடம் கட்ட வேண்டும். 15–வது வார்டில் வசிக்கும் வசந்தா என்கிற ஊனமுற்ற பெண் வீட்டுக்கு, வீட்டுவரி ரசீது கால தாமதம் இல்லாமல் போடுவதற்கு நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.


16–வது வார்டு சித்தேரி கரையில் பூங்கா அமைத்து கொடுக்க வேண்டும். ராஜாஜி நகரில் நீண்ட நாட்களாக வசிக்கும் ஒரு சிலருக்கு, வீட்டுமனை பட்டா வழங்கிட வேண்டும். காமராஜ் நகரில் உள்ள தெருக்களுக்கு வடிகால் சீரமைப்பு பணி மேற்கொள்வதுடன், கோயில் நிலங்களில் உள்ள கருவேல மரம் மற்றும் செடி கொடிகளை அகற்ற, நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கீரைக்கார தெருவில், குடிநீர் பிரச்சனையை தீர்க்க வேண்டும். பள்ளேரி சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதுடன், ஆறாவது வார்டில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, சம்பந்தப்பட்ட வார்டு பொதுமக்கள் சார்பில் கோரிக்கைகள் வைக்கப்பட்டது.

ஆங்காங்கு நடந்த பகுதி சபா கூட்டங்களில் சிறப்புரையாற்றிய, அரியலூர் எம்.எல்.ஏ., கு.சின்னப்பா, பொதுமக்களின் கோரிக்கைகள் அனைத்தும் தீர்வு காண, நகராட்சி நிர்வாகம் சார்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார்.

இக்கூட்டங்களில் அரியலூர் நகராட்சி சுகாதார ஆய்வாளர் தர்மராஜ், நகராட்சி மேலாளர் செந்தில்குமார், அலுவலர் செல்வி, முன்னாள் நகராட்சித் தலைவர் இரா.முருகேசன், முன்னாள் நகராட்சி கவுன்சிலர் சந்திரசேகர், காங்கிரஸ் கட்சியின் நகரத் தலைவர் சிவக்குமார், 15வது வார்டு சார்பில், சுந்தரம், முருகானந்தம், சந்தோஷ்குமார், ஜெயகாந்தன், ரவிக்குமார், சுப்பிரமணியன், காமராஜ் நகர் ரூபன் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

முடிவில் அரியலூர் நகராட்சி ஆணையர் சித்ரா சோனியா நன்றி கூறினார்.

# செந்தூரான் இன்ஜி., கல்லூரியில் தேசிய ஒற்றுமை தினம் கடைபிடிப்பு




புதுக்கோட்டை,நவ.5–

புதுக்கோட்டை மாவட்டம் லெணா விலக்கில் அமைந்துள்ள செந்தூரான் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் செயல்பட்டு வரும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவ ஆர்வலர்கள் கல்லூரி வளாகத்தில் தேசிய ஒற்றுமை தினத்தை கொண்டாடினர்.

இவ்விழாவில், எங்களது கல்லூரி நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் கல்லூரி முதல்வர், நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் மாணவர்களுடன் இணைந்து தேசிய ஒற்றுமை தினத்திற்கான உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர்.

இதில் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தேசிய ஒற்றுமை தினத்தை கடைபிடித் கொண்டாடினர்.

# லஞ்ச ஊழலுக்கு எதிராக புதுக்கோட்டையில் விழிப்புணர்வு வார விழா

**புதுக்கோட்டை , நவ. 05–**

புதுக்கோட்டை சென்ட்ரல் ரோட்டரி சங்கம், மவுண்ட் சீயோன் பொறியியல் கல்லூரி ரோட்டராக் சங்கம், புதுக்கோட்டை நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியும் இணைந்து நடத்திய கண்காணிப்பு விழிப்புணர்வு வார விழா நேற்று நடைபெற்றது.




நிகழ்வில் மவுண்ட் சீயோன் கல்லூரியைச் சார்ந்த 70 மாணவர்களும் சென்ட்ரல் ரோட்டரி சங்க முன்னாள் தலைவர்கள் நிர்வாகிகள் உறுப்பினர்கள் மற்றும் புதுக்கோட்டை நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியின் அதிகாரிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணையானது நீதிமன்ற வளாகத்தில் இருந்து கீழ ராஜவீதி வழியாக நகர்மன்றம் சென்றடைந்தது. பேரணியில் லஞ்சம் வாங்குவதால் ஏற்படும் தீமைகள் அதனால் உண்டாகும் பாதிப்புகள் குறித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

நிகழ்வில் புதுக்கோட்டை சென்ட்ரல் ரோட்டரி சங்கர் தலைவர் கோபிநாத், மவுண்ட் சீயோன் ரோட்ராக்ட் சங்க தலைவர் அந்தோணி ஜபர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். புதுக்கோட்டை சென்ட்ரல் ரோட்டரி சங்க முன்னாள் தலைவரும் ரோட்டரி மாவட்டம் 3000 த்தின் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு தலைவர் அந்தோணிசாமி தலைமை விருந்தினராகவும் சென்ட்ரல் ரோட்டரி சங்க முன்னாள் தலைவரும் புதுக்கோட்டை வருவாய் மாவட்டம் மண்டல செயலாளர் நிர்வாகம் வெங்கடாசலம் மற்றும் புதுக்கோட்டை வருவாய் மாவட்ட மண்டல செயலாளர் திட்டம் சிவாஜி ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் புதுகை வருவாய் மாவட்ட துணை ஆளுநர் கருப்பையா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர் மேலும் இந்நிகழ்வில் புதுக்கோட்டை நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியின் கோட்ட மேலாளர் சாமிதாஸ் மற்றும் அதிகாரி ரமேஷ் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் இந்த நிகழ்வில் சென்ட்ரல் ரோட்டரி சங்க முன்னாள் தலைவர்கள் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர் நிகழ்வின் இறுதியில் சங்க செயலாளர் கருப்பையா நன்றி கூறினார்.




# தீயணைப்பு துறை அலுவலரின் சாதுர்யம் அறந்தாங்கியில் பெரும் விபத்து தவிர்ப்பு



அறந்தாங்கி,நவ.5–

அறந்தாங்கி டேவிதார் சாலையில் தீ பிடித்த சிலிண்டரை தீயணைப்பு துறை அலுவலர் சாதுர்யமாக இழுத்துச் சென்று தண்ணீரில் மூழ்கடித்தடித்தால் பெரும் விபத்து தடுக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி டேவிதார்சாலை முக்கத்தில் செல்வமணி என்பவர் டீ கடை நடத்தி வருகின்றார். இவர் நேற்று காலை கடையை திறந்து வடை, பலகாரம் போடுவதற்காக அடுப்பை பற்றவைத்தபோது திடீரென நெருப்பு பிடித்து சிலிண்டர் எரியத்தொடங்கியுள்ளது.

இந்நிலையில், சிலிண்டர் எரிகிறது என்றதும் அருகில் இருந்தவர்கள் சிதறி ஓடியுள்ளனர். இந்நிலையில் அந்த வழியாகச் சென்ற புதுக்கோட்டை தீயணைப்பு நிலைய அலுவலர் சந்திரசேகர் உடனடியாக சாதுர்யமாக செயல்பட்டு சணல்சாக்கை நனைத்து சிலிண்டர் மீது மூடி சிலிண்டரை லாவகமாக வெளியே இழுத்துவந்தார். அதன்பின் அருகில் இருந்த சாக்கடை கால்வாயில் சிலிண்டரை மூழ்கடித்தார். இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்து பெரும் விபத்தை தடுத்த புதுக்கோட்டை தீயணைப்பு நிலைய அலுவலர் சந்திரசேகரை அப்பகுதி பொதுமக்கள் பாராட்டினர்.

# வெங்கடேஸ்வரா கல்வியியல் கல்லூரி பி.எட்., எம்.எட்., வகுப்புகள் துவக்க விழா

புதுக்கோட்டை, நவ.5–

புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா கல்வியியல் கல்லூரியில் பி.எட்., மற்றும் எம்.எட்., துவக்கவிழா நடைபெற்றது. குத்துவிளக்கேற்றி விழா இனிதே ஆரம்பமானது. கல்லூரியின் முதல்வர் எம்.இளங்கோவன் அனைவரையும் வரவேற்றார். வெங்கடேஸ்வரா கல்வி நிறுவனங்களின் செயலாளர் பி.கருப்பையா தலைமை வகித்து பேசினார். மதுரை தியாகராஜர் கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஆர். ராஜாகோவிந்தசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு புத்தகங்கள் மற்றும் சீருடைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.



அப்போது அவர் பேசுகையில் மாணவ, மாணவிகள் கற்றல் என்பது சுயமாக கற்றல், ஆசிரியர் மூலம் கற்றல், கலந்துரையாடல் மூலம் கற்றல் என்ற மூன்று வகையாக இருக்குமானால் அது சிறப்பாக அமையும். இன்றைய கற்றலே நாளைய பிரதிபலிப்பாகும், பல்துறை வல்லுநர்களை உருவாக்கும் ஆசிரியரானவர் தான் பட்டம் பெற்றவுடன் கற்றலை நிறுத்திவிட்டால் அறிவை இழந்துவிடுகிறார். எனவே, ஆசிரியரானவர் தினமும் கற்றுக்கொண்டே இருக்கவேண்டும். வகுப்பறையில் மாணவர்களின் கற்றல் வெளிப்பாடு தாமதமாகத்தான் இருக்கும். வகுப்பறை என்பது மாணவர்களுக்கு வகுப்புமட்டுமல்ல, அது மாணவர்களுக்கு கொடுக்கப்படும் வாய்ப்பாகும். ஆசிரியர்கள் மாணவர்களின் உளவியல் அறிந்திருக்கவேண்டும்.

உற்றுநோக்கல், வாசித்தல், சிந்தித்தல் ஆகிய மூன்றும் ஆசிரியருக்கு மிகவும் அவசியமாகும், எனவே, சிறந்த ஆசிரியர் என்பவர் நிதானமாகவும், தெளிவாகவும் மாணவர்களுக்கு கற்பிக்கவேண்டும். கூறுதல், காண்பித்தல், செயல்படுத்துதல் ஆகிய மூன்றும் ஆசிரியருக்கு தெரிந்திருக்கவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

வெங்கடேஸ்வரா கல்வி நிறுவனங்களின் பொருளாளர் கவிஞர் ஆர்.எம்.வீ.கதிரேசன், வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் ஜீவானந்தம், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், துணைத்தலைவர் அழகர்சாமி செயலாளர் பெத்தையன் பொருளாளர் மணிமேகலை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவில் கல்லூரியின் உதவிப் பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியை உதவிப்பேராசிரியை அமுதா தொகுத்து வழங்கினார். உதவிப்பேராசிரியர் திருவள்ளுவன் நன்றி கூறினார்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

புதுகை
வரலாறு
நாளிதழ்

நிறுவனத்தில் பணிபுரிய
ஆட்கள் தேவை

காலிப் பணிஇடங்கள் 2

PHOTOSHOP | PAGEMAKER | INDESIGN

தமிழ் தட்டச்சு நன்கு பயின்ற மற்றும் அனுபவம் உள்ள DTP ஆப்பரேட்டர்கள்
சமூக ஊடகத்தில் ஆர்வமுள்ளோர் உடனடி தேவை.

நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்

தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக பணியாற்றிட
செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை. தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்

மேலும் தொடர்புக்கு :

TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534

புதுகை
வரலாறு
நாளிதழ்

நிறுவனத்தில் பணிபுரிய
செய்தியாளர்கள் தேவை

நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை

தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகாக்கள் வாரியாக
பணியாற்றிட செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை.
தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்.

தாபால் அனுப்பவேண்டிய முகவரி :

TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534



# பால் விலை உயர்வு மக்களை பாதிக்காது : அமைச்சர்

# ஆர்எஸ்எஸ் அணிவகுப்பு ஐகோர்ட் அதிரடி உத்தரவு





# தென் மாவட்டங்களுக்கு இன்று கனமழை எச்சரிக்கை

சென்னை / புதுக்கோட்டை | 05.11.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சித்தரஞ்சன் தாஸ் , இந்திய அரசியல்வாதி (பி.1870) (இ.1925)



கா. சு. பிள்ளை , தமிழகத் தமிழறிஞர் (பி.1888) (இ.1945)



வந்தனா சிவா , இந்திய மெய்யியலாளர், எழுத்தாளர் (பி.1852)



விராட் கோலி , இந்தியத் துடுப்பாளர் (பி.1988)



## இன்றைய நினைவு நாள்

சைமன் காசிச்செட்டி , இலங்கை தமிழறிஞர், அகராதியியலாளர், அரசியல்வாதி (பி.1807) (இ.1860)



கு. ப. சேது அம்மாள் , தமிழக எழுத்தாளர் (பி.1908) (இ.2008)



## உலக சுனாமி விழிப்புணர்வு தினம்